LIBRARY
17 MAR 1967
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 3rd November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: Questions Nos. 369, 370, 371, 372 and 373 are postponed to tomorrow at the request of the Hon. the Minister for Public Health.

Earth tremors in Tambaram

* 341 *Q.*—SRI S. MADHAVAN:
SRI C. KOTHANDARAMA BAGAVATHAR:
SRI K. CHEEMAICHAMY:
SRI M. KALYANASUNDARAM:
SRI V. SANKAR:
} Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government had received any complaints about the explosions which occurred in Tambaram area, near Madras City in the month of April 1966;

(*b*) the reasons for those explosions; and

(*c*) the steps taken to avert the panic in the minds of the people?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Government have received a few representations touching the earth tremors which Tambaram and its neighbourhood had experienced recently.

(*b*) Investigations have been conducted by the Geological Survey of India and the Meteorological Department of the Government of India. The earth tremors are believed to have been caused by crustal adjustments at shallow depths.

(*c*) The attention of the Honourable Members is invited to the Press Note No. 5, dated 18th April 1966 and No. 6, dated 1st June 1966. Copies of these Press Notes a are placed on the Table of the House.

The area in which the tremors occurred lies in a seismically stable area and the possibility of a severe earthquake is ruled out.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த நில அதிர்ச்சி சிலர் பூமியை சோதனை செய்ததினாலேதான் ஏற்பட்டது, அதுவும் ஏரோட்ரோம் பகுதியிலே நடத்தியதினாலே ஏற்பட்டது என்ற செய்தி வெளிவந்ததே, அதுபற்றிக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை என்ன என்று அறியவிரும்புகிறேன்.

---

a Printed as Appendix I on pages 179–183.

[3rd November 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இத்தகைய தகவல் என்னிடம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : கடற்கரையைப் பிரம்மாண்டமான அலைகள் தாக்குவதாலும், கடலுக்கடியிலுள்ள பள்ளத்தாக்குகளில் ஏற்படும் மாறுதல்களாலும் இந்த அதிர்ச்சிகள் நிகழலாம். இந்த அதிர்ச்சிக்கான உண்மைக் காரணங்கள் விஞ்ஞான ரீதியில் கண்டறியப்படும், என்று அறிக்கையில் இருக்கிறது. பல மாதங்கள் ஆகியும் அதிர்ச்சி ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று கண்டு பிடிப்பதற்கு இவ்வளவு காலதாமதம் ஏன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதையெல்லாம் பரிசீலனை செய்பவர்கள் காலவரம்பு வைத்துக்கொண்டு செய்யமுடியாது. ஆனால் ஒரு உறுதி கூறப்பட்டிருக்கிறது. இந்த நில அதிர்ச்சியினால் பரபரப்பிற்கு ஒன்றும் இல்லை, அபாயம் ஒன்றும் இல்லை, என்று சொல்லப்படுகிறது.

SRI V. SANKARAN : Sir, it is stated in the statement laid on the Table of the House that ' The State Government are also arranging for an official of the Meteorological Department to be posted at Tambaram for personally studying the phenomenon and submit the scientific reports to the Director of the Regional Meteorological Centre, Madras '. May I know whether this official has been posted by the State Government, if so, whether he has studied the phenomenon and submitted a scientific report and if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is under the consideration of the Government.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இந்த நில அதிர்ச்சியினால் ஏதாவது கட்டடங்களுக்குச் சேதம் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

SRI V. SANKARAN : Sir, it is also stated in the statement laid on the Table of the House that ' The possible causes for such tremors would be scientifically studied '. May I know whether the Government have taken any steps to scientifically study the possible causes for such tremors?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is being done by the concerned experts.

கச்சத் தீவு

*342 கேள்வி.—திரு. செ. மாதவன் : } கனம் முதல்
திரு. கரு. சீமைச்சாமி :
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கச்சத் தீவிற்கு இந்திய மீனவர்கள் செல்வது இலங்கைப் போலீஸாரால் தடைசெய்யப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?